அறியாமையில் இருக்கும் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி

# சமத்துவச் சமுதாயம் அமைத்திட உழைப்போம்!

## பெரியார் நினைவு சமத்துவபுரத்தை பார்வையிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் ட்விட்டர் பதிவு!

சேலம், ஜீன் 13 -

“அறியாமையில் இருக்கும் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி சமத்துவச் சமுதாயம் அமைத்திட உழைப்போம்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது ‘ட்விட்டர்’ பக்கத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

**’சேலத்திலிருந்து மேட்டூர் புறப்பட்டேன். வழியில், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட கோனூர் ஊராட்சியில் உள்ள பெரியார் நினைவுச் சமத்துவபுரத்தைப் பார்வையிட்டேன்.**

**1998ஆம் ஆண்டு தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட இந்தச் சமத்துவபுரத்தில் உள்ள வீடுகள் - சாலைகள் உள்ளிட்டவற்றில் பழுது நீக்கிச் சீரமைக்கும் பணிக்குக் கடந்த 2021-2022ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்திருந்தோம். தற்போது அங்குள்ள மக்களைச் சந்தித்து, சாலை மற்றும் குடிநீர் வசதிகள் பற்றிக் கேட்டறிந்தேன். அப்போது அங்கிருந்த மக்கள் அனைத்து வசதிகளும் சிறப்பாக இருப்பதாகவும், சமத்துவபுரத்தைச் சீரமைத்ததற்கு நன்றியும் தெரிவித்தனர்.**

**அவர்கள் முகத்தில் தெரிந்த மகிழ்ச்சி நாடெங்கும் பரவி, நாடே சமத்துவபுரமாகிட வேண்டும் என்ற தமிழினத் தலைவர் கலைஞரின் கனவு என் எண்ணங்களில் ஓடியது.**

**கலைஞர் 100-இல் அவரது இலட்சியங்களை மக்களிடம் கொண்டு சேர்த்து, இன்னும் அறியாமையில் இருக்கும் மக்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தி, சமத்துவச் சமுதாயம் அமைத்திட உழைப்போம்.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

குழந்தைத் தொழிலாளர் இல்லாத

# குவலயம் போற்றும் ஒளிமிகு தமிழ்நாடு நோக்கி ஒன்றாகப் பயணிப்போம்!

## குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தையொட்டி விடுத்த செய்தியில் - முதல்வர் வேண்டுகோள்!

**சேலம், ஜீன் 13-**

**இன்று, குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள செய்தியில், “அரசு நிறுவனங்களும், உள்ளாட்சி அமைப்புகளும், தொழிற்சங்கங்களும், தொழில் நிறுவனங்களின் உரிமையாளர்களும் ஒரே குரல் ஓங்கி ஒலித்து குழந்தைத் தொழிலாளர் இல்லாத குவலயம் போற்றும் ஒளிமிகு தமிழ்நாடு நோக்கி நாம் அனைவரும் ஒன்றாகப் பயணிப்போம்!” என்று குறிப்பிட்டார்.**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர் களின் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்புத் தினச் செய்தி வருமாறு:-**

குழந்தைப் பருவம், ஒவ்வொருவருக்கும் ஏற்படும் மகத்தான வாழ்க்கைநிலை. துள்ளிக்குதிக்கவும், உலகைப் பார்த்து வியக்கவும், ஒவ்வொன்றையும் துருவித் துருவி ஆராயவும், அனைவரும் முயலும் அரிய பருவமே குழந்தைப் பருவம்.

குழந்தைகளை மிகப் பெரிய பேறு என்று கருதியதால்தான் வள்ளுவர் மழலைகளுக்காக ஓர் அதிகாரத்தையே ஒதுக்கினார். மழலைகளின் குரல்கள் யாழையும், குழலையும் மிஞ்சுவன என்று பாராட்டினார்.

**கற்றுக்கொள்ள மட்டுமல்ல; பள்ளிகளே நாற்றங்கால்கள்!**

குழந்தைகள் விளையாடியும், கலந்துரையாடியும், கதை பேசியும் களிக்கவேண்டிய பருவத்தில், அவர்களைப் பள்ளிகளிலிருந்துப் பிரித்தெடுத்து, பட்டறைகளுக்கு அனுப்புவது மாபெரும் குற்றம்; அவர்களின் குழந்தைத் தனத்தைத் திருடும் பாதகம். குழந்தைகள் பள்ளிகளுக்குப் படிப்பதற்கு மட்டும் செல்வதில்லை. சக குழந்தைகளோடு பூக்களை ரசிப்பதற்கும், புன்னகை களைப் படரவிடுவதற்கும், பூமியின் உயிர்த் துடிப்பை உணர்வதற்கும் தான். கற்றுக்கொள்ள மட்டுமல்ல; உற்று நோக்கவும் பள்ளிகளே அவர்களுக்கு நாற்றங்கால்களாக இருக்கின்றன.

**பணியிடம் எனும் சிறையில் அடைக்கும் கொடுமை!**

குடும்பச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, குழந்தைகளின் குழந்தைத்தனத்தைத் திருடி, துடிப்பு மிக்க அவர்கள் பார்வையை மங்கியதாக மாற்றி, துள்ளு கின்ற அவர்களைத்து வள்கிறவர்களாக்கி, பாடத்தை ஏந்த வேண்டிய அவர்கள் கைகளில், பணிக் கருவிகளைத்தாங்கும்சூழ்நிலையை உருவாக்கி, அவர்கள் சிறகுகளைக் கத்தரித்து, பணியிடம் என்கின்ற சிறையில் அடைப்பது மிகப் பெரிய கொடுமை.

குழந்தைத் தொழிலாளர் முறையை முற்றிலுமாக அகற்றுவது அவர்களுக்கு அளிக்கப்படுகிற மிகப் பெரிய விடுதலை, வாழ்நாள் பரிசு. தமிழ்நாடு அரசு அதனைத் தன் தலையாய கடமையாகக் கருதி, விழிப்புணர்வை விதைத்துக் கொண்டு வருகிறது. மாபெரும் இயக்கமாக இது ஓங்கி வளர்ந்திருப்பதால், குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றுவதில் தமிழ்நாடு இந்தியாவில் முன்னோடி மாநிலமாக முன்னேறி யிருக்கிறது. 2025 ஆம் ஆண்டுக்குள் குழந்தைத் தொழிலாளர் இல்லாத தமிழ்நாட்டை உருவாக்க வேண்டுமென்பதே அரசின் இலக்கு.

**இருகைகளால் உதவிகளை வாரி வழங்குகிறது அரசு!**

குழந்தைகள் செம்மையாகப் படிக்க, கட்டணமில்லாக் கல்வி; கைகளில் தவழும் பாடப் புத்தகங்கள்; எழுதிப் பழக நோட்டுப் புத்தகங்கள்; அவையனைத்தையும் வைக்க புத்தகப் பை; அணிந்து மகிழ சீருடை; பசியின்றிப் படிக்க காலைச் சிற்றுண்டி யும்; மதிய உணவும்; வசதியாய் நடக்கக் காலணி; அசதியின்றி பயணிக்கப் பேருந்து அட்டை; ஓட்டிப் பழக மிதிவண்டி என்று உதவிகளை இரண்டு கைகளாலும் அள்ளி அள்ளி வழங்குகிறது தமிழ்நாடு அரசு. படிப்பு சுமையாக இல்லாமல், சுகமாக மாறவே இத்தனை நலத் திட்டங்கள்.

தமிழ்நாடு அரசு வகுக்கும் திட்டங்களை, அரசுத் துறைகள் செயல்படுத்துவதோடு, குழந்தைத் தொழிலாளர் முறையை முற்றிலும் அகற்றிட நிறுவனங்களும் ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்று விரும்புகிறோம். அரசு சாரா நிறுவனங்களும், உள்ளாட்சி அமைப்புகளும், தொழிற்சங்கங்களும், தொழில் நிறுவனங்களின் உரிமையாளர்களும் ஒரே குரலில் ஓங்கி ஒலித்தால், குழந்தைத் தொழிலாளர் இல்லாத குவலயம் போற்றும் ஒளிமிகு தமிழ்நாடு உருவாகும்.

அதை நோக்கி நாம் அனைவரும் ஒன்றாகப் பயணிப்போம்!!!

இவ்வாறு முதல்வர் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



கோவையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மோகன் அவர்களை அவரது இல்லத்தில் அமைச்சர் கா.ராமச்சந்திரன், கோவை மாநகர் மாவட்ட செயலாளர் நா.கார்த்திக் ஆகியோர் அவரது இல்லத்திற்குச் சென்று மரியாதை நிமித்தமாக சந்தித்து நலம் விசாரித்தார். உடன் பொதுக்குழு உறுப்பினர் குறிச்சி பிரபாகரன், குறிச்சி தெற்கு பகுதி செயலாளர் கார்த்திகேயன், தெற்கு மண்டல தலைவர் தனலட்சுமி ரங்கநாதன், மாமன்ற உறுப்பினர் உதயகுமார், பகுதி துணை செயலாளர் சுரேந்திரன், வார்டு செயலாளர் குமரேசன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி முன்னாள் ஒருங்கிணைப்பாளர் இரா.விஜயராகவன், முகம்மது ஜின்னா, கண்ணன் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பேரூர் ஆ. நடராஜன்

**ஜூன் 13 (2017)**



**இளமைப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டதோடு, தொழிலாளர்களுக்காக குரல் கொடுத்தவர்.**

**கழகத்தின் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை துவக்க காலத்திலேயே, அதில் மிகுந்த ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**கழக தொழிலாளர் அணிச் செயலாளராகவும் – தொ.மு.ச. பேரவைத் தலைவராகவும், தமிழ் மாநிலக்குழுத் தலைவராகவும் பொறுப்பு வகித்து பணியாற்றியவர்.**

**1977, 1984, 1989, 1996 ஆகிய நான்கு முறை பேரூர் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**“தொழிலாளர் நலனுக்காகவே தினசரி சிந்தித்து வாழ்ந்து வந்த ஒரு மாபெரும் தூணை இழந்து நிற்கிறது கழகம்” என கழக செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** தம்பி....! தொடர்ந்து உயர்த்தப்பட்டு வரும் “ மின்சாரக் கட்டணத்தைச் செலுத்த முடியவில்லை என்றால், வீட்டில் ‘பேன்’ சுவிட்சைப் போடாதீர்கள்...வீட்டுக்கு வெளியே போய் மரத்தடியில் அமர்ந்து கொள்ளுங்கள்!” என்று, அஸ்ஸாம் சட்ட மன்றத் தலைவர் பிஸ்வாஜித் தைமாரி, அந்த மாநில பொதுமக்களைக் கேலி செய்திருக்கிறாரே ?

**பட்டணம் :** **ஆமாம் அய்யா, அவர் பா.ஜ..கவைச் சேர்ந்தவர் அல்லவா ! அவர் அப்படிச் சொல்லியிருப்பதில் ஆச்சரியம் ஏதும் இல்லை !**

**ஆனால் அவர் தனது அதிகாரப் பூர்வமான வீட்டில், மொத்தம் 22 ஏ.சி.க்களைப் பொருத்தி, வெகு சுகமாக வாழ்கிறாராம். அதற்கான கட்டணத்தை அரசாங்கம் அல்லவா செலுத்துகிறது!**

**பிரான்ஸ் நாட்டின் கடைசி மகாராணி மேரி அன்ட்னாய்னெட், பசியால் வாடிய மக்கள் தம் பசி போக்கிக்கொள்ள ரொட்டித்துண்டு கேட்டபோது, போய் ‘கேக்’சாப்பிடும் படி கேலி பேசினாராம்.**

**அந்த சர்வாதிகார ராணிக்கும், அஸ்ஸாம் பா.ஜ.க. சபாநாயகருக்கும், அதிகார மமதையில் எந்த வேறுபாடும் இல்லை.**

**ஆனால் ஒன்று; இது மாதிரி நபர்கள், பா.ஜ.க. பயணத்தின் திசையைப் பறைசாற்றுகிறார்கள் !**

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பிறந்தநாள் விழா!

# வல்லம் ஒன்றியம் மொடையூர் ஊராட்சியில் கண் சிகிச்சை முகாம்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்!

*செஞ்சி, ஜூன் 13 -*

*விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வல்லம் ஒன்றியம் மொடையூர் ஊராட்சியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு இலவச கண் சிகிச்சை முகாம் நடந்தது.*

*முகாமில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளரும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சருமான செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு முகாமை தொடங்கி வைத்து ஏழை எளிய மக்களுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கினார். மாவட்ட அவை தலைவர் டாக்டர் சேகர் தலைமை தாங்கினார். வல்லம் தெற்கு ஒன்றிய செயலாளர் மொடையூர் துரை அனைவரையும் வரவேற்றார்.*

*முகாமில் ஒன்றிய சேர்மன் அமுதா ரவிக்குமார், ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, இளம்வழுதி, ஒன்றிய அவைத் தலைவர் ராமகிருஷ்ணன், மாவட்ட கவுன்சிலர்கள் அன்பு செழியன், சசிகலா மோகனசுந்தரம், ஒன்றிய கவுன்சிலர்கள் பக்தவச்சலம் ,ரேணுகா வேலாயுதம், விஜயா கண்ணன், ஊராட்சி மன்ற தலைவர்கள் கோவிந்தன், மேல் சேவூர் ராஜகோபால், மாவட்ட பிரதிநிதிகள் பாண்டியராஜன், கண்ணன், அண்ணாதுரை, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் திண்டிவனம் சந்திரன், துணை அமைப்பாளர் சந்திரன் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் பரிதா, சுந்தரி சௌந்தர்ராஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.*

*கற்பக விநாயகா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் கண் மருத்துவர் டாக்டர் பிரீனிதா தலைமையிலான குழுவினர் கண் சிகிச்சை முகாமில் கலந்துகொண்டு 300க்கும் மேற்பட்டவர்களுக்கு கண் சிகிச்சை மற்றும் ரத்த அழுத்தம், சர்க்கரை நோய் கண்டறிந்து இலவசமாக பரிசோதனைகள்செய்து மருந்து மாத்திரை வழங்கினார். முகாமிற்கான ஏற்பாடுகளை மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர் செய்திருந்தார்.*



கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் முரசொலி முகவர் பி.ராமுநீலா மகன் சரவணன், மண்டகப்பாடி சரவணன்கவிதா மகள் மகாலட்சுமி ஆகியோர் திருமணம் பகண்டை கூட்டு ரோட்டில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. மணவிழாவிற்கு கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் கார்த்திகேயன் கலந்து கொண்டு திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். விழாவில் தொழிலதிபர் ஹரி பிரசன்னா, திலகவதி நாகராஜன், சென்னம்மாள் அண்ணாதுரை, பெருமாள், துரைமுருகன், ஆறுமுகம், அசோக் குமார், ரோஜாமணி தாகாபிள்ளை, பகண்டை சப்இன்ஸ்பெக்டர்கள் சூர்யா, சோலை, ஜெயராமன், மற்றும் ஐயப்பன், முகமது ரபிக், நவாஸ்கான், வசந்தகுமாரி லிங்கநாதன், அர்ச்சனா காமராஜன், வளர்மதி ராமகிருஷ்ணன், கிருஷ்ண பிரசாத், அகிலன், இம்தியாஸ், ரத்தினவேல், அரசு வழக்கறிஞர் அண்ணாமலை, வழக்கறிஞர்கள் திருநாவுக்கரசு, தாமரைச்செல்வன், சத்தியமூர்த்தி, முகமது பாஷா, அன்பழகன், ரமேஷ் குமார், ரவீந்திரன், தாமோதரன், அனைத்து பத்திரிகை துறை சார்ந்த நண்பர்கள் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள். வேல்மயில் அனைவரையும் வரவேற்றார்.

ஹாங்காங்கில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் காணொலியில் பங்கேற்பு!

*ஹாங்காங், ஜூன் 13 -*

*முத்தமிழறிஞர் கலைஞரின் அயலக உடன்பிறப்புகள் குழு சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் பன்முக ஆளுமையை பற்றி உலகின் பல நாடுகளில் வாழும் பல் துறை அறிஞர்கள் மூலம் அனைவருக்கும் கொண்டு செல்லும் வகையில் ஓர் ஆண்டிற்குள் 100 கூட்டங்கள் நடத்தப்படவிருக்கிறது.*

*10 .6.2023 அன்று நடைபெற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு 100 கூட்ட துவக்க விழாவினை அமைச்சர் செஞ்சி மஸ்தான் மூலம் காணொலி தொடங்கி வைத்தார்.*

*நிகழ்ச்சியில் வாஷிங்டன் சிவா அனைவரையும் வரவேற்று பேசினார். தலைமை ஒருங்கிணைப்பாளர் லண்டன் செந்தில் குமார் நிகழ்வில் தொகுப்புரை வழங்கினார்.விக்ரம் சதிஷ் தொகுத்த ஹாங்காங் தி.மு.க. நட்பு குழுவின் வெளியீடான முத்தமிழ் அறிஞர் கலைஞரின் பொன்மொழிகள் மற்றும் வாழ்க்கை குறிப்புகள் 100 எனும் நூலினை அமைச்சர் செஞ்சி மஸ்தான் வெளியிட்டார்.*

*அடுத்து நடக்க இருக்கும் கூட்டங்களின் திட்டத்தினை ஒருங்கிணைப்பாளர்கள் செந்தில் மற்றும் விக்ரம் விளக்கி கலந்துகொண்ட ஆளுமைகளின் கருத்தினையும் பெற்றுக்கொண்டனர்.*

*நன்றியுரையினை ஹாங்காங் விக்ரம் வழங்கினார்.*

*உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து கலந்துகொண்ட உடன்பிறப்புகள் நிகழ்வின் இறுதியில் கலந்துரையாடினர்.*



தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அவரின் சாதனைகளை விளக்கும் வகையில் அரூரில் இருந்து திருவாரூர் மாவட்டம் திருக்குவளை கலைஞர் இல்லம் வரை அரூர் கிழக்கு ஒன்றிய மாவட்டப் பிரதிநிதி என்.சேதுநாதன் (63) சைக்கிள் பயணம் செய்கிறார். அரூர் ரவுண்டானா அண்ணாசிலை அருகில் தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் பி.பழனியப்பன் அவரது சைக்கிள் பயணத்தை கொடி அசைத்து தொடங்கி வைத்தார். உடன் மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.